





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## DECEMBER

*We Are Here..!! To Guide You..!!*







# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## டிசம்பர் - 04.12.2018

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்





- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- விருதுகள்
- முக்கிய தினங்கள்









## இந்திய நிகழ்வுகள்

- இந்தியா உள்ளிட்ட 19 நாடுகள் பங்குபெற்ற **G-20 உச்சி மாநாடு** அர்ஜென்டினா தலைநகர் **பியூனஸ் அயர்ஸில்** நடைபெற்றது. இம்மாநாட்டில் பொருளாதாரக் குற்றவாளிகளுக்கு எதிராக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து, இந்தியா சார்பில் பிரதமர் நரேந்திர மோடி 9 அம்ச கோரிக்கைகளை முன்வைத்துள்ளார்.
    - அதில், பொருளாதாரக் குற்றவாளிகளைக் கைது செய்வதற்காக ஒரு தனிப்படை, **Financial Action Task Force** என்று பெயரில் அமைக்கப்பட வேண்டும்.

- காசநோய் மற்றும் நுரையீரல் நோய்க்கு எதிரான விழிப்புணர்விற்காக, நுரையீரல் ஆரோக்கியம் மீதான **50வது ஒன்றிய சர்வதேச மாநாடானது** 2019ஆம் ஆண்டில் ஹைதராபாத்தில் நடைபெற உள்ளதாக நுரையீரல் நோய்க்கு எதிரான சர்வதேச ஒன்றியமானது அறிவித்துள்ளது. (**50th Union World Conference on Lung Health**)
    - இம்மாநாட்டின் கருத்துரு : "அவசர நிலையின் முடிவு : அறிவியல், தலைமைத்துவம், நடவடிக்கை" (Ending the Emergency : Science, Leadership, Action).

## உலக நிகழ்வுகள்

- **கடத்தலுக்கு எதிரான** போராட்டத்தில் திறனுள்ள ஒருங்கிணைப்பை உறுதி செய்தல், எல்லை மேலாண்மையை மேம்படுத்துதல் மற்றும் வணிகங்களை எளிதாக்குதல் ஆகியவற்றிற்காக **ஹாட்லைன் (Hot Line)** ஒன்றை அமைக்க **இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகள் முடிவெடுத்துள்ளன**.

- பெட்ரோலியப் பொருள்கள் உற்பத்தி நாடுகள் கூட்டமைப்பான **"ஒபக்" (OPEC – Organisation of the Petroleum Exporting Countries)** அமைப்பில் இருந்து **கத்தார் விலகப்** போவதாக அறிவித்துள்ளது. உலகளவில் இயற்கை எரிவாயு உற்பத்தியில் முதலிடத்தில் உள்ள கத்தார் அதனை அதிகரிக்கப் போவதாகவும், கச்சா எண்ணெய் உற்பத்தியை அதிகரிப்பதாகவும் தெரிவித்துள்ளது.

  - இதன் மூலம், பெட்ரோல், டீசல் விலை நிலவரத்தில் தாக்கம் ஏற்படக் கூடும்
- குறிப்பு:
  - OPEC – என்பது பெட்ரோலியம் உற்பத்தி செய்யும் 15 நாடுகளின் கூட்டமைப்பு. இது 1960 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.
  - இதன் தலைமையகம் ஆஸ்திரியாவின் தலைநகர் வியன்னாவில் உள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- அமெரிக்காவின் லால் ஏஞ்சலீஸ் நகரில் நடைபெற்ற 2018ஆம் ஆண்டிற்கான **WBA உலக குத்துச் சண்டை ஹெவிவெயிட் போட்டியில்** அமெரிக்காவின் **"டியோன்டே வைல்டர்"** பிரிட்டனின் டைசன் பியுரிக்-யை வென்று **2018 உலக குத்துச் சண்டை சாம்பியன் ஷிப்** பட்டத்தை வென்றுள்ளார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- ரஷ்யாவின் அரசு விண்வெளி நிறுவனமான, **ரோஸ்காஸ் - மோஸ்** ஆனது **மாரத்தன் (Marathon) எனப் பெயரிடப்பட்ட** செயற்கைகோள் அமைப்பினை **(new satellite system)** தொடங்க உள்ளது.
  - இந்த செயற்கைகோள் அமைப்பானது 2026ல் முழுமையாக நிறுவப்படும். மேலும் இது ரஷ்யாவின் ஸ்பியர் செயற்கைக் கோள் குழுவின் ஒரு பகுதியாகும்.

## விருதுகள்

- 2008ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வென்ற **இந்திய துப்பாக்கி சுடுதல் வீரர் அபினவ் பிந்தரா** சர்வதேச துப்பாக்கி சுடுதல் சம்மேளனத்தின் உயரிய கவுரவமான **"புளு கிராஸ் விருது"-க்கு தேர்வு** செய்யப்பட்டுள்ளார்.

## முக்கிய தினங்கள்

- **சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் - டிசம்பர் 03**
    - மாற்றுத் திறனாளிகளின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாடு மற்றும் மாற்றுத் திறனாளிகளை அதிகாரப்படுத்துவதற்காக, ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3ம் தேதி சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் கடைபிடிக்கப்படுகிறது.
    - 2018ம் ஆண்டு சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தின மையக்கருத்து (2018 Theme) : **மாற்றுத் திறனாளிகளை அதிகாரப்படுத்துதல் மற்றும் உள்ளடக்கிய சமத்துவத்தை உறுதிபடுத்துதல்** (Empowering Persons with disabilities and ensuring inclusiveness and equality) என்பதாகும்.

We Shine Academy™